# வடமராட்சிப் பகுதியில் நேற்று அகோர வான் தாக்குதல் ஒருவர் பலி; ஆறு பேர் காயம்; கட்டிடங்கள் பலத்த சேதம்

நேற்றுக்காலை 6.30 மணிமுதல் வல்வெட்டித்துறை, தீருவில், ஊரிக்காடு, பொலிகண்டி, பருத்தித்துறை, இடைக்காடு போன்ற வடமராட்சிப் பகுதிகளில் பரவலான வான் தாக்குதல் நடாத்தப்பட்டது. ஆரம்பத்தில் இரண்டு ஹெலிகள் தாக்குதலை நடாத்தின இவற்றைத் தொடர்ந்து வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் வை — 12 ராட்சத விமானம் ஒன்றும் இப்பகுதிகளில் தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதலினால் ஒருவர் கொல்லப்பட்டார் ஆறுபேர் காயமடைந்தனர். பல கட்டிடங்கள் சேதமடைந்தன எஸ் வடிவேலு என்பவரே இதில் கொல்லப்பட்டவராவார் எஸ். சந்திரசேகரம், எஸ் உருத்திரகுமார், எஸ் மலர்விழி, விஜயா துரைராசா, இவர் மகள் வசந்தி என்போரே காயமடைந்தவர்களாவர். (ப-11, 32, 71)

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 32 பிரமோதூத மார்கழி14 (29-12-1990) சனி

## யாழ்ப்பாண பத்திரிகையுடன் சென்றவர் வவுனியா முகாமில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகையை கொழும்பு கொண்டு செல்வதற்கு முயற்சித்த ஒரு வயோதிபர் வவுனியா படையினரின் சோதனையின் போது கைது செய்யப்பட்டு கடந்த வாரம் முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர் அங்குள்ள படையினர்களுக்கு அப்பத்திரிகையில் வந்த விடயங்களைப் படிக்க, தமிழ் தெரிந்த சிங்கள இராணுவத்தினர் தமது சகாக்களுக்கு சிங்களத்தில் மொழிபெயர்த்து தெரிவிக்கின்றனர். படையினருக்கு எதிரான செய்திகளைக் கண்டதும் இராணுவத்தினர். அப்பத்திகையை கொண்டு வந்தவரை நையப்புடைக்கின்றார்களாம், இவர் இதுவரை விடுவிக்கப்படவில்லையென அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண பத்திரிகையில் உணவுப்பார்சல் சுற்றிக் கொண்டு சென்ற சிலரும் இவ்வாறு இம் சிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

31 ஆம் திகதி திங்கள் நள்ளிரவு முதல்

# ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தம்

# விடுதலைப் புலிகள் அறிவிப்பு!

## பேச்சுவார்த்தைகளுக்கும் தயார்

இம் மாதம் 31-ம் திகதி நள்ளிரவிலிருந்து காலவரையறையற்ற போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது. பிறக்கும் புத்தாண்டிலிருந்து சிங்கள ஆயுதப்படைகளுக்கு எதிரான சகல போர் நடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.

''தமிழீழத்தில் சமாதானத்தையும், சகஜ நிலையையும் உருவாக்கும் ஒரு நல்லெண்ண நோக்கத்துடன் ஒருதலைப்பட்சமான முறையில் கால வரையறையற்ற போர் நிறுத்தத்தை நாம் பிரகடனம் செய்கிறோம். ஆனால் அதேவேளை எமது சமாதான முயற்சியை நிராகரித்து ஸ்ரீலங்கா அரச போர் நடவடிக்கைகளைத் தொடருமாயின் எமது தேசிய விடுதலை இராணுவம் எதிர்த் தாக்குதல்களை நடத்தத் தயங்க மாட்டாது.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழீழ மக்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடர்வதா, அல்லது சமாதானத்

## அரசாங்க அதிபர்களுக்கு கூடுதல் பொறுப்புக்கள்

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவது ஓய்வூதிய அலுவல்களை கவனிப்பது போன்ற முக்கிய அரசாங்க மட்டத்தில் பரவலாக்கப்படவிருக்கிறது.

இதற்கான முடிவு எடுக்கப் பட்டிருப்பதாக பொது நிரு

## வாழைச்சேனையில் 21 தமிழர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனைப் பகுதியில் தமிழாகள் வாழும் பகுதிக்கு வந்த முஸ்லிம் ஊர்காவற்படையினர் 21 பேரைக் கைது செய்தனர்.

கடந்த 17-ந்திகதி இவ்வாறு கைதுசெய்யப்பட்டோரைப் பலமாகத் தாக்கிய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (71)

## அம்பாறையில் தாக்குதல் 10 சிப்பாய்கள் பலி; ஆயுதம் மீட்பு

அம்பாறையில் லொறி ஒன்றில் வந்த இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் பத்துச் சிப்பாய்கள் பலியானார்கள் ஆயுதங்களும் மீட்கப்பட்டன.

நேற்றுக்காலை லொறி ஒன்றில் பல இடங்களுக்கும் ரோந்து சென்ற ஓர் ராணுவ அணி பக்கியல்லப் பகுதியில் புலிகளின் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகினர், இத் தாக்குதலில் 10 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் எஞ்சியோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர்.

லொறியில் இருந்து ராணுவத்தினரின் ரி 56-II-2, மகஸின் - 8, ரி 56-I-2, மகஸீன்-4 ரி 81-1, மகஸீன் -2 ஐ. எம் ரவைகள் - 233, ஜே ஆர் குண்டுகள் - 3, ஹெல்மட் - 2 என்பன புலிகளால் மீட்கப்பட்டது. (71)

### மட்டக்களப்பு 40-ம் கிராமம்

## இராணுவம், ரேலோ இணைந்து 10 பெண்களை பாலியல் வன்முறை

மட்டக்களப்பு மாவட்டம் நாற்பதாம் கிராமம் எனும் பகுதியை சுற்றிவளைத்தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இச்சம்பவத்தில் பன்னிரண்டு

தேசிய அடையாள அட்டை களை வழங்குவது ஓய்வூதிய அலுவல்களை கவனிப்பது போன்ற முக்கிய அரசாங்க பணிகள் விரைவில் மாவட்ட

...விருக்கிறது.

இதற்கான முடிவு எடுக்கப் பட்டிருப்பதாக பொது நிரு

— 4 ஆம் பக்கம் பார்க்க

தமிழீழ மக்களுக்கு எதி ராக யுத்தத்தைத் தொடர் வதா, அல்லது சமாதானத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பு மாவட்டம் நாற்பதாம் கிராமம் எனும் பகுதியை சுற்றிவளைத்த ராணுவத்தினரும் ரெலோவி னரும பல பெண்களையும், சிறுமிகளையும் கைது செய் தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற இச்சம்பவத்தில் பன்னிரண்டு வயதான இரு மாணவிகள் உட்பட பத்துப் பெண்கள்

— 4 ஆம் பக்கம் பார்க்க

# உணவுக் கப்பல்கள் அனுப்புவதில் அரசிடம் சரியான திட்டமில்லை

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை அனுப்புவதில் அரசின் உயர்மட்டத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவு வதால், இங்கு தேவைப்படும் உணவுப் பொருட்களில் ஐந்து சதவீதத்தைக்கூட மக்கள் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

லங்காசிறி, விங்கோரேடர், குமண, சிகிரியா ஆகிய நான்கு கப்பல்களை கடந்த ஜூன் மாதம் முதல் இன்று வரை வடபகுதிக்கு உணவுப் பொருள் அனுப்பும் சேவை யில் அரசு ஈடுபடுத்தி வந்துள் ளது.

ஆனால் இக்கப்பல்கள் இங்கு வருவது பத்திரிகைகள் வாயிலாகவும், ஏனைய தொடர்புச் சாதனங்கள் மூலமாகவும் உலகுக்கு பெரிது படுத்திக்காட்டப்படுகிறது

இக்கப்பல்கள் இங்கு வந்த தும் திடீர் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்படுவதால் இறக்கும் வேலைகள் தாமத மடைகின்றன. ஊரடங்கு

— 4 ஆம் பக்கம் பார்க்க

## லங்காசிறி கப்பல் திங்கள் கொழும்புதிரும்பும்

பருத்தித்துறையில் தரித்து நிற்கும் லங்காசிறி கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை தபாற் பொதிகளுடன் கொழும்பு செல்லுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இம்மாதம் 30ம் திகதி குமண கப்பல் தனியார் வைத்தியசாலை களுக்குரிய மருந்து வகைகளு டனும், மற்றும் தபால், அத் தியாவசிய உணவுவகைகளு டன் இங்கு வருமென எதிர் பார்க்கப்படுகிறது.

யாழ் குடாநாட்டுத் தபால கங்களிலிருந்து சேகரிக்கப் பட்ட 101 தபாற் பொதிகள் கொழும்பு செல்லவிருக்கும் லங்காசிறி கப்பலுக்கு அனுப் பப்பட்டது. (ப-11 33)

## மட்டக்களப்பில் வயோதிபர் படுகொலை தொடர்கிறது

மட்டக்களப்பு வெல்லா வெளி முகாம் ராணுவத்தினர் ரோந்து சென்றபோது அப் பகுதியில் இருவயோதிபர் களை சுட்டுக்கொன்றுள்ள னர்.

இச்சம்பவத்தில் பொ. துரை சாமி (80), பொ. வடிவேலு (65) ஆகிய வயோதிபர்களே கொல்லப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது.

நத்தார்தினத்தன்றுதிருப்பழு காமம்கிராமத்திற்குவந்தஇரா ணுவம் இளையதம்பி தம்பி ராசா (60) என்ற வயோதி பரை கைது செய்து பொது மக்கள் முன்னிலையே வெட் டியும் சுட்டும் படுகொலை செய்தனர். (71)

## வீர மரணம்

நேற்றுப் பிற்பகல் 2 மணி யளவில் வீமன்காமம் இரா ணுவ முகாம் அருகே நடந்த மோதலில் பாலா (இரா சையா தவநேசன், அச்சு வேலி தெற்கு நாவற்காடு வீரமரணமடைந்தார். இவ ருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர். (71)

## மாகாண கல்விப் பணிப்பாளராக 'சுந்தர்' நியமனமாகலாம்!

யாழ் கல்வித்திணைக்களத் தின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் மாகாண கல்விப் பணிப் பாளராக மாற்றப்படவுள்ள தாக அவரே சூசகமாகத் தெரிவித்து 'முரசொலி'யின் செய்தியை ஊர்ஜிதப்படுத்தி யுள்ளார்.

''எட்டு இடங்களில் கடமை புரிந்த நான் ஒன்பதாவது

— 4 ஆம் பக்கம் பார்க்க

## திருப்பழுகாமத்தில் 5 வீடுகள் குண்டுவைத்து தகர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டத் தின் திருப்பழுகாமம் பகுதி யைச் சுற்றிவளைத்த இரா ணுவத்தினர் 5 வீடுகளைக் குண்டுவைத்துத் தகர்த்துள் ளனர்.

கடந்த சனியன்று நடந்த இக்குண்டுத் தகர்ப்பில் சோம சூரியன் கைலாசபிள்ளை, சிறி அழகரட்ணம், மகாலிங்கம் ஆகியோரின் வீடுகள் முற்றாக சேதமடைந்ததுடன் அருகே யுள்ள வீடுகளும் சிறுசேத மடைந்தன.

இத்தகர்ப்பின் போது ஏற் பட்ட பெரும் சத்தத்தினால் அக்கிராமத்திலிருந்த கர்ப் பிணிகளும், குழந்தைகளும் பெரும் உடல் உளத்தாக்கத் திற்குள்ளானதாகவும் தெரி விக்கப்படுகிறது. (71)

போற்றி அருளுக - 7

# திருவருள் சுரக்கும் சிவகாமசுந்தரி



பூவையர்கள் பொய்கைக் கரைக்கு வந்துவிட்டார்கள். நீர் நிரம்பிய அந்தப் பொய்கையிலே பாய்ந்து, நீந்தி, முழுகி விளையாடுவது தான் அவர்களுடைய நோக்கம்.

''பொய்கையைப் பார்த்தாலே எங்கள் இறைவனின் திருமேனிப் பொலிவு நினைவுக்கு வருகிறது இல்லையா.?''

''ஆமாம் அது மட்டுமல்லாமல், எங்கள் பிராட்டியின் திருக்கோலத்தையும் எண்ணிப் பார்க்க வைக்கிறது— இந்தப் பொய்கை.''

''குவளை பூத்திருக்கிறது, கருநீல வண்ணத்திலே— ஐயனின் திருநீலகண்டம் போல!''

''அம்மையின் கருவிழிகளைப் போல!''

''சிவப்புத் தாமரைகள் சிவபெருமானின் தீ வண்ணத்தை நினைவுபடுத்துகின்றன.''

''ஏன், பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து திருவருள் சுரக்கும் சிவகாமசுந்தரியின் திருமுகச் செழுமையுந் தான் நினைவுக்கு வருகிறது—செந்தாமரையைப் பார்க்கப் பார்க்க.''

''அங்கங்குருகினத்தால்...''

''அதென்னடியம்மா, இலக்கணசுந்தரி?''

''குளத்தில் வாழும் குருவிகளைத்தான் கூறினாள் போலும், 'குருகினம்' என்று.''

''ஆமாம். குருகு என்றால். குருவி, திருநீறு, வளையல் —இவற்றையும் குருகு என்ற சொல் நினைவூட்டும்.''

''எப்படி? எப்படி? எனக்கு விளங்கவில்லை.''

''குருகு என்று சொல்லாமல் கொக்கு என்று சொல்லியிருக்கலாம். 'நம்போலியருக்கு' அதுதான் நன்றாக விளங்கும்.''

''என்ன விளங்கும்?''

''வெள்ளை விளங்கும்.''

''விடுகதை சொல்லுகிறீர்களே, எல்லாரும்! எனக்குத் தலை சுற்றுகிறது.''

''கொக்கு என்ன நிறம்?''

''வெள்ளை''

''திருநீறு?''

''அதுவும் வெள்ளை நிறம் தான். இது யாருக்குத் தான் தெரியாது?.

''சரி வளையல் என்ன நிறம்?''

''பொன் நிறம்.!''

''உன்னுடைய பொற்காப்பைப்பற்றி நான் கேட்கவில்லை. சாதாரண சங்கு வளையலைப் பற்றித்தான் நான் கேட்கிறேன். சங்கு வளையல் என்ன நிறம்?''

''சரியப்பா. சங்கு வளையலும் வெள்ளை நிறந் தான். அதுக்கென்ன, இப்போது?''

''இந்தக் குளத்தில் வாழும் கொக்குகள், குருவிகள் எல்லாம் வெள்ளை வெளேர் என்று, பளிச்சென்று, [illegible]

## மீண்டும் தளிர்

யாழ் பல்கலைக்கழக மறுமலர்சிக் கழக ஒன்றியம் புரட்டாதி - ஐப்பசிக்கான தளிர் சஞ்சிகையைத் தற்போது வெளியிட்டுள்ளது.

(ப-11)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12172

### விற்பனைக்கு

மீண்டும் பழைய இடத்தில் எமது நிறுவனம் இயங்குகின்றது புதுவருட, நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும் நடைபெறுகிறது. லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர், 249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 12182

## டிப்ளோமா முடிவுகள் வெளியாகின

யாழ்பல்கலைக் கழக பட்டப் பின்படிப்பு கல்வியியல் டிப்ளோமா பகுதிநேரம் 2-ம் வருடம், முதலாம் வருடம் மற்றும்முழுநேர பரீட்சைமுடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ப-10)


இயற்கையோடியைந்த வாழ்வு

நுளம்புத் தொல்லையிலிருந்து விடுபட வேப்பெண்ணை பாவித்து விளக்கெரியுங்கள். கண்ணுக்கும் குளிர்ச்சி. போத்தல் ரூபா 80 மட்டும்.

திருநெல்வேலி, இணுவில், யாழ்நகர் நவீன சந்தை அண்ணா கோப்பிக் கடையிலும் விற்பனையாகிறது.

மில்க்வைற்

யாழ்ப்பாணம்

12185


## 'போராட்டத்தை நசுக்கவே - அரசு இளைஞருக்கு விசா வழங்குகிறது'

இராணுவ ரீதியான எமது போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத சிங்கள இனவாத அரசு எம்மை பொருளாதார ரீதியாக நசுக்க முற்படுகிறது.

இவ்வாறு நேற்று முன்தினம் முடமாவடியில் லெப். சங்கீதா (க. றேனுகா) நினைவுத்தூபி திறப்பு விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஜன் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் எமது போராட்டத்தில் இளைஞரின் பங்களிப்பைத் தவிர்க்கவே வெளிநாடுகளுக்கு அதிகமாக விசா கொடுக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது.

எமது போராட்ட வளர்ச்சி இப்பொழுது எல்லையை எட்டித்தொடக் கூடிய அளவுக்கு வளர்ந்துள்ளது. இவ்வளர்ச்சிக்கு வித்திட்டு விருட்சமாக்கிய பெருமை மாவீரரையே சாரும்.

எத்தகைய கஷ்டத்தின் மத்தியிலும் போராட்டத்தைக் கைவிட மாட்டோம்; உணவில்லாவிடில் நீர் அருந்திக் கூடப் போரிடத் தயங்க மாட்டோம் எனவும் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (74)

## பழைய இரும்பு கிலோ 2 ரூபா

வவுனியாவில் பழைய இரும்பிற்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு பழைய இரும்பை கொள்வனவு செய்வோர் ஒரு கிலோவிற்கு இரண்டு ரூபாய் வழங்குகிறார்களாம். (61)


ஞானசம்பந்தர் இல்லம்
(சிறார் காப்பகம்)
மானிப்பாய் வீதி, உரும்பிராய்

பதவி வெற்றிடங்கள்

1. சமையற்காரர் ஒருவர்

வயது 45-55 ஆண் அல்லது பெண்
இல்லத்திலேயே தங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். குழந்தைகளைப் பேணிப்பார்க்கும் பண்பினராக இருத்தல் அவசியம்.

2. காவற்காரர் - இல்லப் பொதுப் பணியாள் ஒருவர்

வயது 45 - 55 ஆண்
குழந்தைகளைப் பேணிக்காக்கும் பண்பினராகவும், சமூகசேவை நோக்குடையவராகவும் இருத்தல் வேண்டும் சைக்கிள் ஓடத் தெரிந்திருக்க வேண்டும். இல்லத்தில் தங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

3. பகுதிநேரத் தோட்ட வேலையாள் ஒருவர்

வயது 40 - 60 ஆண்.
இல்லத்துத் தோட்ட வேலைகளைத் தானாகவே செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். குழந்தைகளுடன் நன்கு பழகக் கூடியவராக இருத்தல் வேண்டும். இல்லத்துக்கு அண்மையில் இருப்பவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஒவ்வொரு பதவிக்குமுரிய வேதனம் பேசி முடிவெடுக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 15. 1. 91



தொழிற் பயிற்சிகள்

★ றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் தொழிற்பாடு திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம் : 5 மாதம்

★ றீவைண்டிங்
மின்மோட்டார், விசிறி, டைனமோ றீவைண்டிங் செய்தல், பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 3 மாதம்

★ எலக்ரிக்கல் வயறிங்
வீட்டு மின்சாரவேலை, மின்சாரப்பொருள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 2 மாதம்

★ Computer programming IN BASIC Language
60 மணித்தியால செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 4 மாதம்

★ DIPLOMA IN DRAUGHTSMANSHIP
காலம்: 4 மாதம்

★ Spoken English
ஒரு மாத முழுநேர வகுப்பு.
சனி, ஞாயிறு வகுப்புக்கள் நடைபெறும்.

மீண்டும் ஆரம்பம்: 02 01.1991 (கிழமை நாட்கள்)
30.12.1990 (சனி, ஞாயிறு)

குறிப்பு:-முன்னர் நடைபெற்ற பயிற்சி வகுப்புக்கள் யாவும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன மாணவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

JAFFNA

எல்லாம் வெள்ளை வெளேர் என்று, பளிச்சென்று, ஒளி வீசுகின்றன. அவை எல்லாம் ஐயனின் திருநீற்றையும் அம்மையின் கைவளைகளையும் நினைவு படுத்துகின்றன. இல்லையா?''

''மெய்தான், மெய்தான்!''

''இதைத்தானா, இவ்வளவு சிரமப்பட்டு, விடுகதை போலச் சொல்ல வருகிறாள் இந்த இலக்கண சுந்தரி?''

''ஆமடியம்மா, அறியாச் சிறுமிகளே!''

சிலேடை பேசிய சேயாளும் தோழியரும் சேர்ந்து சிரித்துச் சிரித்துக் கும்மாளம் அடிக்கின்றனர். இதற்கிடையில் இன்னொருத்தி தொடங்குகிறாள்:

''தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்...''

''உடல் அழுக்குக் கழுவுகிறவர்கள் பொய்கைக்கு வருகிறார்கள். உயிரழுக்குக் கழுவுகிறவர்கள்?''

அம்மையப்பரிடம் வருகிறார்கள்''.

### பரீட்சை

''பொய்கை அம்மையப்பரை ஒத்திருக்கிறது ஆகவே, பொய்கையில் முழுகுவது எதனை ஒத்திருக்கிறது?''

''உஸ்ஸ் ..... அமைதி. பரீட்சை! பரீட்சை.''

''நேர்முகப் பரீட்சை.''

எல்லாரும் ஆழ்ந்து யோசிப்பது போல நடிக்கிறார்கள். பின்னர், பல குரல்களில் ஒரே நேரத்தில் வருகிறது, பதில்.

''சிவானந்தத்திலே திளைத்தல்!''

- 'சித்தமழகியான்'

ஒவ்வொரு பதவிக்குமுரிய வேதனம் பேசி முடிவெடுக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 15. 1. 91.

மானிப்பாய் வீதி, செயலாளர்
உரும்பிராய், ஞானசம்பந்தர் இல்லம்

12190

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

### யேம்ஸ் சகாயதாசன்

(உருத்திராசா)

[உதவி முகாமையாளர் Corrugated Paper Industries Limited Colombo - 11; லண்டன் செலவு முகாமைத்துவ (கணக்காளர்) மாணவன் (ICMA Student)]

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 14 - 3 - 1960 | 29 - 12 - 1986 |

அன்பிலே உயர்ந்து பண்பிலே மலர்ந்து
அறிவிலே சிறந்து அருளாளனாய் வாழ்ந்த
உருத்திரபுரமக்களின் நேசமிகு தாசனாய்
உயர்ந்த யேம்ஸ் சகாயதாசனே!
வீணர்களின் குண்டுக்கு இரையாகி மறைந்த போதும்
மண்ணிலே உன் நினைவு மலர்ந்தே இலங்கிடும்.

உருத்திரபுரம்

தந்தை, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

12183

JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவைக்கு அருகாமை
யாழ்ப்பாணம்.

12162

போட்டோஸ்ரற் பிரதிகள்

• சாதாரணம்
• சிறிதாக்கல்
• பெரிதாக்கல்

தரமான தாள்களில் தெளிவான பிரதிகளைப் பெற விஜயம் செய்யுங்கள்




ஸ்கைலைன்ஸ் 281-B, மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்

# கர்ப்பிணித்தாய் மரணம் மீண்டும் அதிகரிப்பு!

## இவ்வருடம் மட்டும் 50 தாய்மார், 150 சிசுக்கள் மரணம்

யாழ் மாவட்டத்தில் கர்ப்பிணித்தாய் மரணங்கள் மீண்டும் அதிகரித்துவருவது வைத்தியசாலை வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வருடம் மட்டும் யாழ் மாவட்டத்தில் சுமார் ஐம்பது கர்ப்பிணித்தாய்மார் மரணமடைந்துள்ளனர்.

இவ் வருடம் ஜனவரி மாதத்திற்குப் பின்னர் யாழ் போதனா வைத்தியசாலையில் மட்டும் 16 கர்ப்பிணித்தாய்மார்கள் இறந்துள்ளமை வைத்தியசாலை பதிவேடுகளில் இருந்து அறியப்பட்டுள்ளது.

இது தவிர இவ் வருடம் நூற்றி ஐம்பது சிசுக்கள் பிறந்தவுடன் மரணத்தைத் தழுவியுள்ளன.

கர்ப்பிணித் தாய்மாருக்கு போதிய போஷாக்கு இல்லாமை, அதிர்ச்சி என்பனவே இந்த கர்ப்பிணித்தாய் மற்றும் சிசு மரணங்கள அதிகரிப்புக்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆறுமாத காலத்தில் அனேகமான கர்ப்பிணித்தாய்மார்கள் இறந்துள்ளதாகவும், யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட திடீர் அதிர்ச்சிகள் இவர்களது மரணத்திற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

### பௌத்த சாசனத்தினுள் பிஸ்டல்!
## மூன்று பிக்குகள் கைது

தெகிவளை மிருகக் காட்சிசாலையில் வைத்து மூன்று இளம் பௌத்த பிக்குகள் பிஸ்டல் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் பௌத்த சாசன ஏட்டினுள் இந்த பிஸ்டலை மறைத்து வைத்திருந்தனராம்.

இதுதவிர விளக்கப்படங்கள், புகைப்படச்சுருள்கள் என்பனவும் இந்த பிக்குகளிடமிருந்து கைப்பற்றப் பட்டுள்ளன. (ப-11)

### அதி சிறந்த உதை பந்தாட்ட வீரனாக
## 39 வயது மத்தியூஸ் தெரிவானார்

இவ்வாண்டு உலகின் அதி சிறந்த உதைபந்தாட்ட வீரனாக 'லோதர் மத்தியூஸ்' என்ற 39 வயதான ஜேர்மன் நாட்டு வீரர் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அகில உலக அதிசிறந்த உதை பந்தாட்ட வீரனைத் தெரிவு செய்யுமுகமாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம், அண்மையில் அதன் தலைவர் ''கலாநிதி ஜோ காவ்லன்ஷ் தலைமையில் கூடியபொழுது, இச்சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 166 நாடுகளில் 145 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இவர்களுள் 6 பேர்களைத் தவிர மிகுதி 139பேரும் 'மத்தியூசை' ஆதரித்து வாக்களித்தனர். (16)

### காரைநகரில் சடலம்
## கரை ஒதுங்கியது

காரைநகர் கசூரினா பீச் கடற்கரைப் பகுதியில் சுமார் 30 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

கறுத்த உருவமுடைய இவரது வலது கையில் கிளிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

இளம் பச்சைநிற உள்ளங்கி அணியப்பட்டிருந்த இச் சடலத்தின் முகம், கால் பகுதிகள் சிதைவடைந்து காணப் பட்டன.

இச் சடலத்தை அப் பகுதிப் பொதுமக்கள் கடற்கரை ஓரத்தில் புதைத்துள்ளனர். (ப-31)

## வெளிமாவட்டங்களில் மூன்று வருடம் சேவைபுரிந்த
## சகல ஆசிரியர்க்கும் சொந்தப் பகுதிக்கு இடமாற்றம்!

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று வெளிமாவட்டங்களில் மூன்று வருடங்கள் சேவையாற்றிய சகல ஆசிரியர்களும் அடுத்த ஜனவரி முதல் தங்களது சொந்த மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இதற்கான அங்கீகாரத்தை கல்வி அமைச்சு வழங்கியதைத்தொடர்ந்து இடமாற்றம் பெறுபவர்களின் பெயர்ப்பட்டியல் வடக்குகிழக்கு மாகாண கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

1985-ம் ஆண்டு நியமனம் பெற்று மூன்று வருடங்கள் வெளிமாவட்டங்களில் சேவை புரியாமல் 1988-89ல் பலாலி கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சியை முடித்து பின்னர் வெளிமாவட்டங்களில் நியமிக்கப்பட்ட சகல வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களும் தத்தமது சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெறவுள்ளனர். (43)

## பொலிஸ் எழுதுவினைஞர்களுக்கு பதவி நீக்கக்கடிதம்

யாழ். பொலிஸ் திணைக்களத்தைச்சேர்ந்த பல எழுதுவினைஞர்களுக்கு பதவி நீக்கக் கடிதம் வந்துள்ளது.

இவர்களை வவுனியா பொலிஸ் அலுவலகத்திற்கு வந்து உடன் கடமைகளைப் பொறுப்பேற்கும்படி பணித்தும், அதை நிறைவேற்றத் தவறிய பலருக்கே இவ்வாறான கடிதம் வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் சிலர் தமது கஷ்டங்களைத் தெரிவித்தும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி இணங்க மறுத்து இவர்களை கடமையாற்ற அனுமதிக்கவில்லையாம். (ப-1)

### ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி

தமிழகத்தின் முக்கிய வைணவ ஆலயங்களில் நேற்று அதிகாலை சொர்க்கவாசல் திறப்பு வைபவம் வைகுண்ட ஏகாதசி விழாவையொட்டி நடைபெற்றது.

முக்கிய தலமான ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் சுவாமி ஆலயத்தில் அதிகாலை உற்சவமூர்த்தி மூலஸ்தானத்திலிருந்து புறப்பட்டு பரமபதா வாயிலை வந்தடைந்ததை அங்கு குழுமியிருந்த இலட்சக்கணக்கான பக்தர்கள் கண்டுகளித்தனர்.

### 'மரியாளின் மகத்துவம்' நூல் அறிமுகவிழா

''மரியாளின் மகத்துவம்'' ஒளிவிழா நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் தொடர்பகத்தில் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தலைவர் துரை ஆரோக்கியதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ் கத்தோலிக்க கலை இலக்கியவட்டத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெறவுள்ளது.

## 5 வைத்திய அதிகாரிகள் இம்மாதத்துடன் ஓய்வு பெறுவர்

அரசாங்க ஊழியர்கள் ஓய்வுபெறும் சலுகைத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்

எம். தங்கவேலாயுதம், யாழ் பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளர்

### நல்லூரில் 'போர்க்காலராகங்கள்'

மட்டக்களப்பு பாடுமீன்

### மகாஜனாவில்

★ வைத்திய கலசம்

# வயிற்றோட்டம்

### நீங்கள் கட்டாயம் அறிய வேண்டிய தகவல்கள்

இப்பொழுது வயிற்றோட்டம் பற்றி அதிகம் பேசப்படுகிறது. அகதி முகாம்கள், சுகாதாரச் சீர்கேடுகள், மாரிகாலம் போன்ற இன்றைய நிலைகளால் இந்நோய் வேகமாகப் பரவி வருவதுடன், பல மரணங்களுக்கும் காலாகி விட்டதுமே இதற்குக் காரணமாகும். எனவே இத் தருணத்தில் வயிற்றோட்டம் பற்றி அறிவதன் மூலம் அது பரவாமல் தடுப்பதற்கு உதவுவதுடன், நோய் ஏற்பட்டால் முதல் உதவி செய்யவும், நோயாளியைத் திறமையுடன் பராமரிக்கவும் உதவும்.

வயிற்றோட்டம் எந்த வயதினருக்கும் பொதுவானதாயினும் குழந்தைகளைப் பீடிப்பது அதிகம் குழந்தைகளுக்கு இந்நோய் அதிக பாதிப்புகளை ஏற்படுத்துவதுடன் சிலதருணங்களில் மரணத்திற்கும் இட்டுச் செல்லலாம்.

வயிற்றோட்டத்தின் போது மலத்துடன் அதிக அளவு நீரும் சில ஜீவ உப்புகளும் வெளியேறுகின்றன. வாயினால் உள்ளெடுக்கும் நீரைவிட அதிகளவு நீர் மலத்துடன் வெளியேறும்போது உடலில் உள்ள நீர் வரட்சியடைந்து ஆபத்தான நீரிழப்பு நிலை (Dehydration) ஏற்படுகிறது இந்த நீரிழப்பு நிலை ஏற்படாமல் தடுப்பதே இந் நோய்க்கான சிகிச்சை, பராபரிப்பு ஆகியவற்றின் முக்கிய அம்சமாகும்.

இந் நோயைக் குணமாக்க நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளை (Antibiotics) (உதா. பக்ட்ரிம், அம்பிசிலின்) உபயோகிப்பது அவசியமற்றது. ஏனெனில் வயிற்றோட்டம் பெரும்பாலும் வைரஸ் கிருமிகளாலேயே உண்டாகிறது. வைரஸ் கிருமிகளை அழிக்க நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகள் உதவாது. ஆனால் இந் நோய்கள் தாமாகவே சில நாட்களில் குணமாகிவிடும் (உதாரணம்: சின்னமுத்து, கூகைக்கட்டு)

வயிற்றோட்டம் ஆரம்பித்ததுமே நீரிழப்பு நிலை ஏற்படாமல் தடுக்குமுகமாக போதிய நீராகாரம் கொடுக்க வேண்டும். தாய்ப்பாலூட்டும் குழந்தைகளுக்கு அதனைத் தொடர்ந்தும் கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தாய்ப்பாலை நிறுத்தக் கூடாது.

புட்டிப்பால் கொடுப்பவர்களும் அதனைத் தொடர்ந்து கொடுத்து வரலாம். ஆயினும் அப்பாலின் அடர்த்தியைக் குறைப்பது நல்லது. அதேயளவு பால்மாவை இரு மடங்கு

### டொக்ரர் எம். கே. முருகானந்தன்

நீரில் கரைத்துக் கொடுக்கலாம். இதன் மூலம் மேலதிக நீரையும், போதுமான போஷாக்கையும் கொடுக்க முடியும்.

இதைத் தவிர வேறு சில பானங்களையும் கூடக் கொடுக்கலாம். நெல்லுப் பொரித தண்ணீர், இளநீர், சாயம் குறைந்த தேநீர் ஆகியவற்றைக் கொடுக்கலாம். அத்துடன் வீட்டில் வடித்த கஞ்சிக்குச் சிறிது உப்புப் போட்டுக் கொடுக்கலாம். தேசிக்காய்த் தண்ணீருக்குச் சிறிதளவு சீனியும், உப்பும் கலந்து கொடுக்கலாம். இடையிடையே வெறும் கொதித்து ஆறிய நீரையும் பருக்கலாம்.

மீளநீரூட்டும் பானம் (Oral Rehydration Solution-ORS) கொடுப்பது மிகவும் சிறந்தது. இது ஜீவனி, 'ரீஹைட்ரின்' (Rehydrin) ஆகிய பெயர்களில் மருந்துக் கடைகளில் கிடைக்கும். ஒரு பைக்கற் ORS பவுடரை ஒரு லீற்றர் கொதித்து ஆறிய நீரில் ஒரே முறையில் கரைத்துச் சுத்தமான, மூடிய பாத்திரத்தில் வைக்க வேண்டும். இதனை

இலக்கியவட்டத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெறவுள்ளது.

## மகாஜனாவில் புதிய அனுமதி

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி தொடர்ந்தும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலேயே இயங்கி வருகின்றது.

மகாஜனாக் கல்லூரியில் ஆண்டு ஒன்றிற்கு அனுமதி கோரி விண்ணப்பித்தவர்கள். 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிறப்புச் சான்றிதழ் வதிவிடத்தை அத்தாட்சிப்பத்திரம், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் வேறுபத்திரங்கள் என்பவற்றுடன் சமூகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர்கள் ஒய்வுபெறும் சலுகைத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பதிவுபெற்ற வைத்திய அதிகாரிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பதவியிலிருந்து ஒய்வு பெறவுள்ளனர்.

காங்கேசன்துறை அரசினர் மத்திய மருந்துச்சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி எஸ். சோமசேகரம், இணுவில் அரசினர் மத்திய மருந்துச்சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. தில்லைநாதன், கொக்குவில் அரசினர் மத்திய மருந்துச்சாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். சதானந்தன், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் எம். தங்கவேலாயுதம், யாழ் பிரதேச சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் அலோசியஸ் ஆகியோரே இவ்வாறு ஓய்வு பெறவிருக்கும் டாக்டர்களாவர். இவர்களைத் தவிர மேலும் பல டாக்டர்கள் புதிய ஓய்வூதிய சலுகைத் திட்டத்தின் கீழ் ஓய்வுபெறுவதற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ளனர். (13)

## 'போர்க்காலராகங்கள்'

மட்டக்களப்பு பாடுமீன் கலை மன்றத்தினரின் 'போர்கால ராகங்கள்' என்னும் இசை நிகழ்ச்சி 30-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சி.சி.த.க சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இதில் தமிழீழத்தின் பிரபல பாடகரான ''இந்தமண் எங்களின் சொந்த மண்'' புகழ் சாந்தலிங்கமும் மற்றும் பாடகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர் என மன்றத்தின் தலைவர் அ அமிர்தராஜ் அறிவித்துள்ளார்.

## சி டபிள்யூ. ஈ. மூடப்பட்டது! 35 ஊழியர்கள் கொழும்பிற்கு

கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்தின் (சி. டபிள்யூ ஈ.) யாழ்பிராந்திய அலுவலகமும், களஞ்சியமும் தலைமைஅலுவலகத்தின் பணிப்புரையின் பேரில் இம்மாதம் 21-ம் திகதியுடன் முற்றாக மூடப்பட்டு விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்கு கடமையாற்றிவந்த சுமார் 35 ஊழியர்கள் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கூட்டுறவு மொத்த வியாபார ஸ்தாபனத்தின் யாழ் ரயில் நிலையத்திற்குச் சமீபமாகவுள்ள களஞ்சியச் சாலையும் அலுவலகமும் விமானக் குண்டுவீச்சினால் பலத்த சேதமடைந்தது தெரிந்ததே. (13)

## பாகுபாடு அன்பில் மட்டுமே! சொத்தில் என்றால் சட்டம் விடாது

தமது பிள்ளைகளுக்கு சொத்துக்களை சமமாகப் பகிர்ந்து உயில் எழுதக் கட்டாயப்படுத்தும் சட்ட மூலம் விரைவில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

பெற்றோர் தம்மிடமுள்ள சொத்தில் ஆகக் குறைந்தது அரைப்பங்கையாவது சகல குழந்தைகளுக்கும் சமமாகப்பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்றும், ஏதாவது ஒருபிள்ளை புறக்கணிக்கப்படுமாயின் அதற்கான உரிய காரணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பணிக்கப்படுவார்கள் என்றும் அந்தச்சட்ட மூலத்தில் வலியுறுத்தப்படவுள்ளது.

கும். ஒரு பைக்கற் ORS பவுடரை ஒரு லீற்றர் கொதித்து ஆறிய நீரில் ஒரே முறையில் கரைத்துச் சுத்தமான, மூடிய பாத்திரத்தில் வைக்க வேண்டும். இதனை அடிக்கடி குழந்தைக்குப் பருக்கவேண்டும். ஒரு முறை கரைத்த ORS பானத்தை 24 மணி நேரத்திற்குள் உபயோகிக்க வேண்டும்.

இப்பொழுது ஜீவனி, 'ரீஹைட்ரின்' போன்றவற்றிற்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகிறது. ஆனால் அதனையிட்டுக் கவலைப்பட வேண்டியதில்லை நீங்களே அதனை வீட்டில் தயாரிக்கலாம். 2 மேசைக்கரண்டி சீனி அல்லது குளுக்கோசுடன் $\frac{1}{4}$ தேக்கரண்டி கறியுப்பும், $\frac{1}{4}$ தேக்கரண்டி சமையல் சோடாவையும், ஒரு லீற்றர் நீரில் கரைத்தால் ORS தயாராகி விடும்.

ஒரு லீற்றர் என்பது $2\frac{1}{2}$ யானைச் சோடாப் போத்தல், அல்லது 1 1 3 சாராயப் போத்தல் அளவு நீருக்குச் சமமாகும்.

பிஸ்கற், றஸ்க், பாண், இடியப்பம், இட்லி போன்ற மென்மையான ஆகாரங்களையும் கொடுக்கலாம். வயிற்றோட்டம் குணமானதும் இழந்த சக்தியை ஈடு செய்ய மேலதிக உணவுகளைக் கொடுக்க வேண்டும். கப்பல் வாழைப்பழத்திற்கு மலத்தை இறுகச் செய்யும் தன்மை இருப்பதால் அதனைக் கொடுப்பது நல்லது.

வயிற்றோட்டத்திற்கு வைத்தியரிடம் சிகிச்சைக்காக ஓட வேண்டியதில்லை. நீங்களே இலகுவாகப் பராமரிக்கலாம். ஆயினும் வயிற்றோட்டம் 3-4 நாட்களில் குணமடையாவிட்டால் அல்லது மலத்துடன் இரத்தம் சளி சேர்ந்து போனால் அல்லது சத்தி, காய்ச்சல் போன்றவற்றின் அறிகுறிகளும் சேர்ந்திருந்தால் வைத்தியரிடம் செல்வது அவசியம்.

குழந்தைக்கு நீரிழப்பிற்கான அறிகுறிகள் இருந்தால் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க வேண்டும். அதற்கிடையில் ORS பானத்தைப் பருக்க வேண்டும் வாய் நாக்கு வரட்சி, தண்ணீர்த் தாகம், கண்கள் குழி விழுதல், கன்னம் பள்ளமடைதல், தோல் இழுத்தாற் சுருங்குதல், சிறுநீர் குறைவாகக் கழிதல் போன்ற அறிகுறிகள் நீரிழப்பு நிலையைக் குறிக்கும்.

# அடுத்த ஆண்டில் 5000 ஆங்கில ஆசிரியர்கள்

# நாடு முழுவதும் நியமிக்கப்படவுள்ளனர்

நாடுமுழுவதும் அடுத்த வருடம் ஐயாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இனவிகிதாசார அடிப்படையில் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்கு இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்று கல்விச் சேவைகள் ஆணைக்குழுத் தலைவர் திரு. ஜோர்ஜ்மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதம் ஆங்கில ஆசிரியர்களுக்காக நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் பெறுபேறின் பேரில் 1500 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அடுத்தமாதம் இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் எஞ்சியவர்கள் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகளிலும் நிறுவனங்களிலும் பயிற்சி பெற்றவர்களிலிருந்தும் வெளிப் பயிற்சி பெற்றவர்களிலிருந்தும் தெரிவுசெய்யப்படுவர்.

தமிழ், சிங்கள மொழிகள் மூலம் ஆசிரியர் பயிற்சி பெற்ற 1500 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

### லுவாண்டா விமான நிலையத்தில் குண்டுவெடிப்பு !

மேற்கு ஆபிரிக்க நாடான அங்கோலாவின் சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற பலத்த குண்டு வெடிப்பினால் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குண்டு வெடிப்பில் உயிர்ச் சேதம் ஏற்படவில்லை.

தலைநகர் லுவாண்டாவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் இக் குண்டு பயணிகள் தரிப்பிடத்தில் உள்ள ஓர் படிக்கட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்தது. குண்டுவெடித்ததினால் இரண்டு மாடிக்கட்டிடம் பலத்த சேதமடைந்தது. அருகிலிருந்த கண்ணாடியிலான கடைத்தொகுதி சிதறியது. இதனால் மூவர் மட்டுமே காயமடைந்தனர். குண்டு வெடிப்பதற்கு சிறிது இடைவெளியின் முன்னரே பிரெஞ் விமானம் ஒன்று புறப்பட்டதால் பயணிகள் தரிப்பிடத்தில் பயணிகள் தொகை குறைவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் குண்டுவெடிப்பிற்குக் காரணம் யூனிற்றா கிளர்ச்சியாளர்களே என அங்கோல அரசு குற்றம்சாட்டியுள்ளபோதிலும் அவர்கள் இதை மறுத்துள்ளனர். இதேவேளை எவ் எல் என். ஏ. என்ற அமைப்பு குண்டுவெடிப்பிற்கு உரிமை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

15வருட ஆயுதப் போராட்டத்தின் பின் அங்கோலா அரசிற்கும் யூனிட்டா கிளர்ச்சியாளருக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும்போது இக் குண்டு வெடிப்பு நடந்துள்ளது.

### மிகப்பழமையான உயிர்ச் சுவடுகள் கனடாவில் மீட்பு !

அறுபது கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பூமியில் வாழ்ந்த கடல் உயிரிகளின் சுவடுகள் கொண்ட பாறைகள் கனடாவில் அண்மையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இச் சுவடுகள் கடற் பஞ்சுபோன்ற அமைப்புகளுடைய சிறிய உயிரங்கிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது. உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட அடிச் சுவடுகளில் இதுவே மிகப் பழமையானது என புவியியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் பனிக்காலக்கட்டத்தின் முன்னர் வாழ்ந்த உயிரணுக்களை இக்கடற் பஞ்சுகள் கொண்டுள்ளதாக அமெரிக்க மொண்டேயல் பல்கலைக்கழகம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### ஈராக் ஏவுகணையை சோதிக்க சவுதியில் படையினர்உஷார் நிலையில்

சவுதிஅரேபியாவில் நிலைகொண்டுள்ள சர்வதேசப் படையினர் நேற்றுத் திடீரென உஷார் படுத்தப்பட்டனர். ஈராக் தனது ஸகாட்ரக ஏவுகணையை பரீட்சித்த போது இவ்வுஷார் நிலை சவுதியில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது எனினும் ஈராக்கின் ஏவுகணைகள் சோதனை தளத்திலேயே வீழ்ந்து வெடித்தது ஈராக் தனது ஏவுகணைகளை பரீட்சிப்பது இம்மாதத்தில் இது இரண்டாவது முறையாகும்.

### சத்திரசிகிச்சை வெற்றி ஆனால் குழந்தை இறந்தது !

நேற்று லண்டனில் நடைபெற்ற இருதய மாற்று சிகிச்சை தோல்வியில் முடிந்துள்ளது. பதினொரு நாள் வயதான கிறிஸ்ரி என்ற இக் குழந்தைக்கு இருதயம் தேவைப்பட்டதால் இறந்த ஓர் பெண் குழந்தையின் இருதயம் கிறிஸ்ரிக்குப் பொருத்தப்பட்டது. சத்திர சிகிச்சை வெற்றி [illegible]

### யாழ் மாநகர எல்லைக்குள்

## பிறப்பு இறப்பு பதிவு பிரதிகளை உடன் பெறுமாறு வேண்டுகோள்

யாழ் மாநகரசபை எல்லைக்குள் 1990 ஆம் ஆண்டில் பதியப்பட்ட பிறப்பு, இறப்புப் பதிவுகளின் பிரதிகளை உடன் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பதிவு வேலைகள் அரியாலை சிவசக்தி வைத்திய நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே சில பதிவுப் பிரதிகள் தபால் மூலம் அனுப்பப்பட்டுவிட்டதாகவும் பதிவாளர் டாக்டர் விக்னேஸ்வரா தெரிவித்துள்ளார். (17)

## பதுங்குகுழிக்குள் பிறந்த திவ்விய யேசு பாலன்!

நத்தார் தினத்தையொட்டி அச்சுவேலியில் றொசேரியார் கன்னியர்களின் அமலிவனத்தில் யேசுபாலன் பிறப்பைச் சித்தரிக்கும் காட்சியில் யேசு பாலன் பதுங்கு குழிக்குள் பிறந்ததுபோலச் சித்தரிக்கப் பட்டிருந்தது.

உமிகள் நிரப்பப்பட்ட சாக்கு மூடைகள் மேல் பாதுகாப்புக்காக வைக்கப்பட்ட பதுங்கு குழிக்குள் யேசு பாலன் பிறந்ததுடன், ஏங்கிய நிலையில் மாட்டுத் தொழுவத்தின் மாடுகளும், கன்றுகளும் பதுங்கு குழியின் வாயிலைப் பார்த்தபடி நிற்பதாகக் காட்டப்பட்டுள்ளது.

இக்காட்சியைப் பார்வையிட்ட கிறிஸ்தவர் சிலர் கண்கலங்கியபடி சென்றதைக் காணக்கூடியதாகவிருந்தது. (32)

## இரு முஸ்லிம் இளைஞர்கள் கைக்குண்டுடன் கைது

கொழும்பில் இரு முஸ்லிம் இளைஞர்களை கைக்குண்டு ஒன்றுடன் பொலிஸார் பிடித்துள்ளனர்.

கொம்பனி வீதியில் இரவு நேர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வீதியால் வந்த இவர்களைச் சோதனையிட்டபோதே கைக் குண்டுகள் அகப்பட்டன.

இந்த இருவரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (11)

இராணுவம் ..
இவர்களினால் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டனர்.

இக்கிராம வாசிகள் தமது கிராமத்தை விட்டு வெளியேறி அண்மையில் தான் இங்கு மீளக்குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (71)

## வெளிநாட்டு ட்ராப்டுகளுக்கு பணக்கொடுப்பனவு இல்லை

வெளிநாட்டு 'ட்ராப்டு'களுக்குரிய பணக்கொடுப்பனவுகள் எதுவும் யாழ் இலங்கை வங்கியின் உடனடியாக மேற்கொள்ள முடியாது என இலங்கை வங்கி [illegible] ளப்பட்டுள்ளது.

1987 ல் நடைபெற்ற போர்ச் சூழலில் வெளிநாட்டு ட்ராப்டுகள் பல காணமல் போனதாலேயே தலைமை அலுவலகம் இக் [illegible]

### யாழ் போதனா வைத்தியசாலையில்

## கப்பலில் வந்த 'கோட்டெக்ஸ்' நோயாளிக்கு வழங்க மறுப்பு

யாழ் பெரியாஸ்பத்தியில் சிகிச்சை பெறவரும் பெண் நோயாளிகளுக்கு வழங்குவதற்காக அண்மையில் கப்பல் மூலம் பெரும் தொகையான 'கோட்டெக்ஸ்' இங்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது சிகிச்சை பெறவருவோருக்கு இவற்றை வெளியில் வாங்கி வருமாறு ஆஸ்பத்திரி நிர்வாகம் பணித்துள்ளது.

இதேசமயம் கப்பலில் வந்த 'கோட்டெக்ஸ்' ஆஸ்பத்திரி களஞ்சியத்தில் அதிகளவு இருப்பதாகவும் இவை வெளியிற் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் பெண் நோயாளிகள் தெரிவித்தனர். (71)

## அகதிகளுக்குவழங்கவந்த அரிசியை இராணுவம் ஏற்றிச் சென்றுள்ளது!

அம்பாறை மாவட்டத்திலுள்ள சவளக்கடை இராணுவ முகாமில் இருந்து மண்டூர் இராணுவ முகாமிற்கு வந்த இராணுவத்தினர் டலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைக்கு சென்று அங்கிருந்த 100 மூடை அரிசியைத் தமது வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர்

இந்த அரிசி மூடைகள் அகதிகளாக வந்திருந்தோருக்கு நிவாரணம் வழங்குவதற்கென வந்திருந்ததாகவும் தெரியவருகிறது.

சவளக்கடை, சொறிக்கல் முனைப்பகுதியில் அகதிகளாக வந்திருந்த போது சவளக்கடை இராணுவ முகாம் இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தி வெட்டியும் சுட்டும் கொன்றுள்ளனர். இதன் காரணமாக சவளக்கடை மற்றும் இதனை அண்டியபகுதிகளில் இருந்து வெளியேறி மண்டூரில் வந்திருந்த அகதிகளுக்கு வழங்கவே இந்த அரிசிமூடைகள் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது (71)

## கிளிநொச்சி பிரதான வீதிகள் திருத்தி அமைக்கப்படவுள்ளன

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி ஆகிய இடங்களுக்குச் செல்லும் வீதிகளை திருத்தியமைக்க கிளிநொச்சி அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக புனர்வாழ்வு அமைச்சிடமும், பாதுகாப்பு அமைச்சிடமும் தொடர்பு கொண்டிருப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சிக்கு உணவுப் பொருட்கள் கொண்டுவரப்படுவதற்கு வசதியாகவே இந்த வீதிகள் திருத்தப்படவுள்ளன. (ப-6)

நேற்று லண்டனில் நடைபெற்ற இருதய மாற்று சிகிச்சை தோல்வியில் முடிந்துள்ளது. பதினொரு நாள் வயதான கிறிஸ்ரி என்ற இக் குழந்தைக்கு இருதயம் தேவைப்பட்டதால் இறந்த ஓர் பெண் குழந்தையின் இருதயம் கிறிஸ்ரிக்குப் பொருத்தப்பட்டது. சத்திர சிகிச்சை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட போதிலும் குழந்தை சில மணி நேரத்திலேயே இறந்துவிட்டது.

## நிதிக்கம்பனிகள் நிதிநிலைமைகள் ஆராய ஆணைக்குழு நியமனம்

நிதிக்கம்பனிகளின் நிதி நிலைபரம் மற்றும் இருப்புத் தொகை என்பவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிதி நிறுவனங்களில் வைப்பிலிட்ட பெருந்தொகையான பணத்தை வாடிக்கையாளர்கள் மீளப்பெற்றுச் செல்வதால் அந்நிறுவனங்களின் இருப்புத்தொகை குறித்து ஆராயும் முகமாகவே இவ்வாணைக்குழு நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## லொறிகள் வரவினால் மண்ணெண்ணெய் விலை குறைவு

தெற்கிலிருந்து சில உணவுப் பொருட்கள் லொறிகள் மூலம் நேற்று இங்கு வந்ததையடுத்து மண்ணெண்ணெயின் விலை அரைவாசிப்பங்கு குறைந்தது.

இதேபோல புளி, சவர்க்காரம் போன்றவையும் விலை குறைந்துள்ளன, சீனி விலையும் குறையத் தொடங்கியது,

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மி பில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 29-12-90 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கிராமத்தை விட்டு வெளியேறி அண்மையில் தான் இங்கு மீளக்குடியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (71)

---

மாகாண...

புதிய இடத்துக்குச் செல்லலாம் இது எனது சாதகத்தின் படி ஒன்பதாவது குழந்தையாகவிருக்கும்'' என நகைச்சுவையாக நேற்று யாழ் இந்துக் கல்லூரியில் முதலாம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் திரு சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

---

அரசாங்க...

வாக மாகாண சபைகள் உள்நாட்டு விவகார அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

நிருவாக பரவலாக்கல் மூலம் அரசாங்க அதிபர்களுக்கு கூடுதல் பொறுப்புகளை ஒப்படைக்கும் முகமாக மாவட்ட செயலாளர்களாகவும் அவர்கள் கடமையாற்றுவார்கள் என்றும் அவர் சொன்னார்.

தற்போது ஆட்பதிவு திணைக்களம் கொழும்பிலேயே இயங்கி வருகிறது. வருங்காலத்தில் இந்த திணைக்களத்தின் பணி மாவட்ட கச்சேரிகள் மூலம் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (38)

களுக்குரிய பணக்கொடுப்பனவுகள் எதுவும் யாழ் இலங்கை வங்கியில் உடனடியாக மேற்கொள்ள முடியாது என இலங்கை வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

'வெளிநாட்டு' ட்ராப்டுகளுக்கு பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கொழும்பிலுள்ள இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தலை அடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்

---

ஒரு...

தைக் கடைப்பிடிப்பதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பு ஸ்ரீலங்கா அரசிடம் விடப்பட்டிருக்கிறது ஸ்ரீலங்கா அரசு உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட நாம் அவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறோம்.

எமது போர் நிறுத்தப் பிரகடனத்தை ஏற்று ஸ்ரீலங்கா அரசு யுத்த நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71)

1987 ல் நடைபெற்ற போர்ச் சூழலில் வெளிநாட்டு ட்ராப்டுகள் பல காணமல் போனதாலேயே தலைமை அலுவலகம் இக்கொடுப்பனவுகளை தற்காலிகமாக இடை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வெளிநாடுகளிலுள்ள பல இலங்கையர்கள் வடக்குக் கிழக்கில் தபால் சேவை சீர்கெட்டுள்ளதால் தமது 'ட்ராப்டுகளுக்குரிய பணக்கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டாம் என கொழும்பிலுள்ள இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்தைக் கேட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (70)

---

உணவுக்...

அதிகநாள் இருப்பதால் கப்பல்களும் தண்ணீர் இல்லை என்ற காரணம் காட்டி திரும்பி விடுகின்றன.

கப்பல்களின் வருவகையைப் பார்த்து யாழ் செயலகமும் நிவாரண வேலைகளை ஏற்பாடு செய்கிறது. ஆனால் அது சாத்தியமாவதில்லை.

பொதுமக்களும் கப்பல் வந்த செய்தியைக் கேட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு சென்று ஏமாற்றமடைகின்றனர். (66)

பொருட்கள் கொண்டுவரப்படுவதற்கு வசதியாகவே இந்த விதிகள் திருத்தப்படவில்லை. (ப-6)

---

## கலைஞர்களுக்கான கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவும், நிதர்சன ஒலிபரப்புச் சேவையும் இணைந்து நடாத்தும் தமிழீழக் கலைஞர்களுக்கான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

சகல நாடகக் கலைஞர்களையும், நடிகர், நடிகைகள், பாடகர்கள், இயக்குநர்கள், நாடக பிரதியாக்குநர்கள், நடனக் கலைஞர்கள் அனைவரையும் தவறாது சமூகம் தந்து தங்கள் கருத்துக்களை வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தமிழீழத்தில் கலைஞர்களின் எதிர்காலத் திட்டமொன்றை வகுக்கவும் போராட்டத்துடன் இணைந்து பங்களிப்புச் செய்யவும் இவ்வரவும், கருத்தும் அவசியமாகின்ற காரணத்தால் அனைத்துக் கலைஞர்களும் அழைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.